# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1981/41 - 2016 අගෝස්තු මස 23 වැනි අඟහරුවාදා - 2016.08.23

*1981/41 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் காணி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராகிய எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (5) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட காணி இராஜாங்க அமைச்சருக்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விடயங்கள், கடமைகள் மற்றும் திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் என்பன 2016, ஓகத்து 10 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் ஒப்படைக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜோன் ஏ. ஈ. அமரதுங்க,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
2016, ஓகத்து 22.

**அட்டவணை**

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்கள் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடுகை<br>2. காணி நிர்ணயம் தொடர்பான நடவடிக்கை<br>3. காணி உரித்துப்பதிவு<br>4. II ஆம் நிரலில் காட்டப் பட்டுள்ள திணைக்களங்களை கண்காணித்தல் மற்றும் நெறிப் படுத்தல்<br>5. III ஆம் நிரலில் காட்டப் பட்டுள்ள சட்டங்களை அமுலாக்குதல் | 1. காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்<br>2. காணி உரித்து நிர்ணயத் திணைக்களம் | * காணி நிர்ணய கட்டளைச் சட்டம் (1931 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க)<br>* உரித்து பதிவுச் சட்டம் (1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) |

9- 272